
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**955**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# மாநாடு

**ர.பிரகாசு**

**80**

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**



ஓவியம் : சிகரன்

## கழக சரித்திரத்தின் கால்கோள் நாட்டு விழா!

திருச்சி என்றால், திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு திருப்புமுனை மட்டுமல்ல, தொடக்கப்புள்ளியும் அதுதான்... 1951-ஆம் ஆண்டு டிசம்பரில் சென்னை எஸ்.ஐ.ஏ.ஏ. திடலில் முதல் மாநில மாநாடு நடைபெறுவதற்கு முன்பே, மாவட்ட அளவில் எண்ணற்ற மாநாடுகளை, மக்கள் வியக்கும் வண்ணம் தி.மு.கழகம் நடத்தியது. அந்த வகையில், 01-01-1950-இல் திருச்சியில் நடைபெற்ற மாவட்ட மாநாடு முதன்மையானது, முக்கியமானது.

நகரின் பல இடங்களில் வரவேற்புப் பதாகைகள், மாநாட்டுப் பந்தல் அமைப்பு, மேடை அலங்காரம், மின்சார வசதி, குடிநீர் வசதி என ஏற்பாடுகள் அனைத்தும் மக்கள் வியக்கும் வண்ணம் அமைக்கப்பட்டிருந்தது. மாவட்ட மாநாடா அல்லது மாகாண மாநாடா என சந்தேகங்கொள்ளும் அளவுக்கு, மக்கள் கூட்டம் கூடியிருந்தது. சென்னை, செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென்னாற்காடு, தஞ்சை, கோவை, சேலம், மதுரை, இராமநாதபுரம், நெல்லை எனப் பல்வேறு மாவட்டங்களில் இருந்து தொண்டர்கள், நிர்வாகிகள் மாநாட்டிற்கு வருகை தந்திருந்தனர்.

கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களின் இசைப் பாடலுடன் மாநாடு தொடங்கியது. மாநாட்டுத் தலைவர் திரு.ஈ.வி.ஏ.வள்ளிமுத்து கழகக் கொடியை ஏற்றி வைத்தார். மாநாட்டுச் செயலாளர் ஜி.பராங்குசம், மாநாட்டின் குறிக்கோள்களை விளக்கிப் பேசினார். வரவேற்புரையாற்றிய என்.சங்கரன், “மக்களாட்சி மலர, மக்களைப் பிடித்துள்ள பழமை மடிய வேண்டும். வருணாசிரமக் கொடுமை, சாதி சனியன், வைதீக தர்மம், புராணப் பித்தம், கண்மூடிப் பழக்கம், மூட நம்பிக்கை ஆகியவற்றையெல்லாம் மக்கள் மனதில் இருந்து களைந்து எறிந்தாக வேண்டும்'' என்று உணர்ச்சிபொங்க உரையாற்றினார்.

மாநாட்டைத் தொடங்கிவைத்து பேசிய பெத்தாம்பாளையம் பழனிசாமியின் கருத்து, தி.மு.கழகத்திற்கு எக்காலமும் பொருந்தும். “திராவிடம் தனித்து நின்று ஆட்சிபுரிந்து, மற்ற மாகாணத்தினருக்கும் வடநாட்டுப் பாசிசத்தை அழிக்கும் வழிவகையை எடுத்துக்காட்டும் முறையில் பணியாற்ற, திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு சிறிதும் பின்வாங்காது என்பதை அடக்கப் பார்க்கும் அரசியலார்க்கு எடுத்துக்காட்டுகிறேன்” என்று முழங்கினார் அவர்.

இந்தியத் துணைக்கண்டத்துக்கு, பாசிச பா.ஜ.க.வை எதிர்க்கும் வழியை, இன்றும் தி.மு.கழகம்தான் காட்டிக்கொண்டிருக்கிறது.

நாவலர் நெடுஞ்சியன், என்.வி.நடராசன், சி.பி.சிற்றரசு ஆகியோர் கழகம் அன்று சந்தித்த அடக்குமுறைகள் குறித்தெல்லாம் வீரவுரை நிகழ்த்தினர். அதன்பிறகு பேரறிஞர் அண்ணா கருத்து மழை பொழிந்தார். இரவு, நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி, அண்ணா, சம்பத் மற்றும் இயக்கத் தோழர்கள் நடித்த ‘சந்திரமோகன்’ நாடகத்துடன் மாநாடு முடிவு பெற்றது.


தொழிற்சங்க உரிமைகளைப் பறிக்கக்கூடாது, அறநிலையத்துறை நிதியை மக்கள் நல்வாழ்வுக்குச் செலவிட வேண்டும், இலங்கைத் தமிழர்க்கு ஆதரவு, இந்தித் திணிப்புக்கு கண்டனம் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநாடு குறித்து திராவிட நாடு இதழில் எழுதிய அண்ணா, “திருச்சி மாநாடு எதிர்பார்த்ததை விட சீரும் சிறப்புமாக பன்மடங்கு வெற்றியுடன், எல்லோரும் பூரிக்கும் அளவில், எல்லா வகையிலும் பாராட்டக்கூடிய வகையில் முடிந்தது., கழகச் சரித்திரத்தில் கால் நாட்டு விழாவைச் செய்து பெருமை பெற்ற அத்துணை பேரையும் திராவிடம் மறவாது” என்று பாராட்டினார்.

திருச்சியைத் தொடர்ந்து சென்னை, கோவை மாவட்டக் கழகங்களும் மாநாடுகளை கூட்டி, தி.மு.கழகத்தின் எழுச்சிக்கு வித்திட ஆயத்தமாகின. புயல் வேகத்தில் கிளைக்கழகங்கள் துளிர்விட்டன. திருச்சி அதை கண்முன் காட்டியது.

**...கூட்டம் திரளும்**

## நூறாண்டு கால சுயமரியாதை இயக்கம் - சென்னையில் கருத்தரங்கம்!




தந்தை பெரியார் மற்றும் திராவிட இயக்கம் குறித்த வரலாற்றை இந்திய அளவிலும், உலக அளவிலும் கொண்டு சேர்க்க வேண்டியது காலத்தின் தேவையாக இருக்கிறது. இந்தப் பணியின் ஒரு பங்களிப்பாக, சென்னைப் பல்கலைக் கழகம், திராவிடர் வரலாற்று ஆய்வு மையம் ஆகியவை இணைந்து, சென்னையில் இரண்டு நாட்கள் தேசிய கருத்தரங்கை நடத்த உள்ளனர்.

‘நூறாண்டு கால சுயமரியாதை இயக்கம் - பெரியார் மற்றும் திராவிட இயக்கம், ஒரு சகாப்தம்’ என்கிற தலைப்பில், சென்னையில் வரும் செப்டம்பர் 11, 12 -ஆம் தேதிகளில் இரு நாள் தேசிய கருத்தரங்கம் சேப்பாக்கத்தில் உள்ள சென்னைப் பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள தந்தை பெரியார் அரங்கில் நடைபெற உள்ளது.

திராவிடர் வரலாற்று மையம் மற்றும் சென்னை பல்கலைக்கழகத்திலுள்ள அறிஞர் அண்ணா பொது விவகார ஆய்வு மையம் இணைந்து இந்தக் கருத்தரங்கை நடத்த உள்ளன. முழுக்க ஆங்கிலத்தில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில், நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து அறிஞர்கள், கல்வியாளர்கள் கலந்து கொண்டு உரை நிகழ்த்த உள்ளனர். இந்தக் கருத்தரங்கில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் முன்பதிவு செய்து கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பதிவு செய்பவர்கள் வாட்ஸ் அப் வழியாகவும் ஒருங்கிணைக்கப்படுகின்றனர். முன்பதிவு செய்ய QR குறியீட்டை ஸ்கேன் (SCAN) பதிவு செய்யவும்.

## ஃப்ளாஷ்பேக்



### பேராசிரியர் பற்றிய நினைவுகள்!


‘அங்காடி’ சேகர்

1988-ஆம் ஆண்டு, மயிலாடுதுறை ஒன்றியச் செயலாளர் இல்ல திருமண நிகழ்ச்சிக்காக நமது இனமானப் பேராசிரியர் அவர்கள் வருகை தந்தார். அதையொட்டி, அவரை அழைத்து வந்து நாகப்பட்டினம் - கீழ்வேளூரில் கழக நிதியளிப்பு பொதுக்கூட்டம் நடத்தி 35 ஆயிரம் ரூபாய் நிதி அளித்தோம். அப்போது ஒன்றிய இளைஞரணி அமைப்பாளராக இருந்தேன். பேராசிரியர் கையைப் பற்றிக் கொண்டிருக்கும் இந்தப் படம், கழகப் பற்றுக்கு என்றென்றும் சான்றாக இருக்கும். பின்னால் மூக்கில் விரல் வைத்து நிற்பவர் இன்றைக்கும் நூறாவது ஆண்டைக்கடந்து வாழ்ந்து கொண்டிருக்கும் அண்ணன் டி.எஸ்.கல்யாணசுந்தரம் அவர்கள்.

**– ‘அங்காடி’ சேகர், இலக்கிய அணி மாவட்ட துணைத் தலைவர், கீழ்வேளூர், நாகப்பட்டினம் மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

# பாசறை படிப்பறை

**கௌதம் ராஜ்**

**80**

**சுயமரியாதை-சமத்துவம்- சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**




## திசையும் தீர்வும் திராவிடம்!

தன் 76 - வது பிறந்த நாள் விழாவுக்குத் தயாராகி கொண்டிருக்கிறது திராவிட முன்னேற்றக் கழகம். அத்தகைய சிறப்புக்குரிய திராவிட மாதமான செப்டம்பரில் பல்வேறு முக்கிய நிகழ்வுகள் நடந்தேறி வருகின்றன. உலகப் புகழ்பெற்ற ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் ஏற்பாடுசெய்யப்பட்ட சுயமரியாதை இயக்கம் குறித்த கருத்தரங்கத்தில், பெரியாரின் உருவப்படத்தைத் திறந்து வைத்து, சிறப்புரையாற்றி இருக்கிறார் கழகத் தலைவர் அவர்கள்.

இந்நிகழ்வில், திராவிட இயக்கம் குறித்த இரண்டு முக்கியமான ஆங்கில நூல்கள் முதலமைச்சர் அவர்களால் வெளியிடப் பட்டிருக்கின்றன. ஒன்று பெரியார் குறித்து ஆய்வறிஞர்களின் கட்டுரைகள் அடங்கிய ‘The Cambridge Companion to Periyar’. மற்றொன்று, தொடங்கப்பட்ட 1949-ஆம் ஆண்டு முதல் ஆட்சி பொறுப் பேற்ற 1967-ஆம் ஆண்டு வரை, தி.மு.கழகம் தமிழ்நாட்டு அரசியலில் ஏற்படுத்திய தாக்கம் குறித்து, மிக ஆழமாக விவரிக்கும் ‘The Dravidian Pathway’ (திராவிடப் பாதை). லண்டன் கிங்ஸ் கல்லூரியில் முனைவர் பட்டம் பெற்ற விக்னேஷ் ராஜாமணி எழுதியிருக்கும் இந்நூலை, வெஸ்ட்லாண்ட் பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

நான்கு அத்தியாயங்களாகப் பகுக்கப்பட்டிருக்கும் இந்நூலின், முதல் பகுதி பல்வேறு அடையாளங்களை உள்ளடக்கிய திராவிட- தமிழ் சகோதரத்துவத்தை, தந்தை பெரியாரும் தி.மு.க.வும் எவ்வாறு உருவாக்கினர் என்பதையும் அவை தொடர்ந்து நெகிழ்வுத் தன்மையுடன் அரசியல் சூழலுக்கு ஏற்ப, உருமாறி வருவதையும் சுட்டிக்காட்டுகிறார்.

திராவிட இயக்க அரசியலில், வாசிப்புக்கு முக்கிய இடமுண்டு. தேநீர்க் கடைகளும், சைக்கிள் கடைகளும், சிகைத் திருத்தகங்களும் மன்றங்களாகவும் படிப்பகங்களாகவும் விளங்கி அன்றாட அரசியல் நிகழ்வுகள் குறித்த வாசிப்பை, எவ்வாறெல்லாம் ஊக்குவித்தன என்பதையும், அதன் மூலம் இளம் தலைமுறையினர் அரசியல் அறிவும் அனுபவமும் பெற்றதை கள ஆய்வுகளுடன் இரண்டாவது பகுதி விவரிக்கிறது.

இடஒதுக்கீட்டை உறுதி செய்த அரசியலமைப்பின் முதல் திருத்தம், ராஜாஜியின் குலக்கல்வித் திட்டம், மாநிலங்களின் மறுசீரமைப்பு, 1963-பிரிவினைத் தடைச் சட்டம், 1965-மொழியுரிமைப் போராட்டம், விலைவாசி உயர்வு போன்ற பிரச்சினைகளில் தி.மு.கழகம் எடுத்த நிலைப்பாடுகள் எப்படி அதன் வீச்சை அதிகரித்தன என்பதையும் வெகுமக்கள் இயக்கமாக உருவெடுக்க வழிவகுத்தன என்பதையும் புள்ளிவிவரங்களுடன் விளக்குகிறது மூன்றாவது பகுதி.

1967-தேர்தலில் பெருந் தலைவர் காமராசர்- மாணவர் சங்கத் தலைவர் சீனிவாசனிடம் அடைந்த தோல்விக்குப் பின்னணியில் இருந்த அரசியல் காரணங்களையும், அதை திராவிட இயக்கம் பெருந்தன்மையுடன் அணுகிய விதத்தையும், வரலாற்றுப் பின்னணியுடன் தெளிவுபடுத்துகிறது நான்காம் பகுதி. உயர்சாதியினரின் பிடியிலிருந்த சட்டமன்றம் கொஞ்சம் கொஞ்சமாக அனைத்து சாதி பிரதிநிதிகளையும் கொண்ட மன்றமாக உருவெடுக்க, திராவிட இயக்க அரசியல் துணை நின்றதைத் தரவுகளுடன் சுட்டிக்காட்டுகிறது இப்பகுதி.

முடிவுரையும், பின்னுரையும் திராவிட இயக்கம் சமகாலத்தில் சந்திக்கும் பல முக்கியமான சவால்களைப் பட்டியலிடுகின்றன. குறைகளையும் விமர்சனங்களையும் சுட்டிக் காட்டுகின்றன. சாத்தியப்படும் தீர்வுகளையும் முன்வைக்கின்றன. திராவிட இயக்கத்தின் எதிர்கால போக்கைத் தீர்மானிக்கவிருக்கும் இரண்டு முக்கியமான கேள்விகளுடன் நிறைவுறுகிறது.

திராவிட இயக்கம் கடந்து வந்த பாதையை விளக்கி, எதிர்காலத்திற்கான வழியை அடையாளம் காட்டும், இந்நூல் இயக்க வரலாற்றில் முக்கிய வரவு!

**...வாசிப்போம்.**

## நலம் வருக

### பெயர் மாற்றக் கிளர்ச்சி

1961-ஆம் ஆண்டு சென்னை மாகாணத்துக்கு தமிழ்நாடு என்ற பெயரைச் சூட்டவேண்டும் என ‘தமிழ்நாடு பெயர்க் கிளர்ச்சி’ போராட்டத்தை நடத்தியது மேலும், மறைமுக இந்தித் திணிப்பை எதிர்த்து, கையெழுத்து இயக்கமும் நடத்தியது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131